12 ஆம் வகுப்பு - தமிழ்

சிந்தனை வினாக்கள்

சரியான விடையைத் தேர்க.

1) சிற்பி பாலசுப்பிரமணியன் எழுதிய உரைநடை நூலைத் தேர்ந்தெடுக்க.

அ) ஒரு கிராமத்து நதி ஆ) பூஜ்யங்களின் சங்கிலி இ) அலையும் சுவடும் ஈ) சூரியநிழல்

2) சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய நூல் அல்லாதது எது ?

அ) நிலவுப்பூ ஆ) அலையும் சுவடும் இ) சர்ப்பயாகம் ஈ) சூரிய நிலவு

3) செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் - இதில் செம்பரிதி எனும் சொல்லில் இடம்பெறும் புணர்ச்சி விதியைத் தேர்க.

அ) ஈறுபோதல் ஆ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல் இ) ஈறுபோதல், இடையகரம் ஐ ஆதல் ஈ) ஈறுபோதல், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

4) தாமுழைக்கும் தொழிலாளர் வியர்வை வெள்ளம் - இதில் வியர்வைவெள்ளம் என்பதன் இலக்கணக் குறிப்பு

அ) உவமை ஆ) உருவகம் இ) வினையெச்சம் ஈ) பண்புத்தொகை

5) பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க

அ) இலக்கியச்சிந்தனைகள் ஆ) மலையாளக் கவிதை இ) கவிதையெனும் மொழி ஈ) அலையும் சுவடும்

6) சிற்பி எம்மொழியிலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார் ?

அ) மலையாளம் ஆ) ஆங்கிலம் இ) மராத்தி ஈ) கன்னடம்

7) கூண்டதனை உடைத்தெழுந்த சிங்கம்போலச் சீறி வருவது எதுவெனக் கவிஞர் குறிப்பிடுகிறார் ?

அ) வியர்வைவெள்ளம் ஆ) செம்பரிதி இ) தென்தமிழ் ஈ) பூக்காடு

8) கூற்று 1 : அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருவது தொல்காப்பியம்.

கூற்று 2 : இலக்கியத்தையும் அதன் பண்பையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம் தொல்காப்பியம்.

அ) கூற்று 1,2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1,2 தவறு

9) மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவைகளுள் மாறுபட்டவை...

அ) உள்ளுறை ஆ) இறைச்சி இ) உருவகம் ஈ) இலக்கியம்

10) தொல்காப்பியத்தில் , ' நடைநவின்றொழுகும் ' என்ற நூற்பா தொடர் இடம்பெற்ற இயல்

அ) கிளவியாக்கம் ஆ) மரபியல் இ) செய்யுளியல் ஈ) சொல்லியல்

11) பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில் மிக முக்கியமானவை அல்லாதது...

அ) கலைமுழுமை ஆ) ஒலிக்கோலங்கள். இ) சொற்களின் புலம். ஈ) தொடரியல் போக்கு

12) முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு; முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர் ; - இப்பாடல் தொடரில் அமைந்துள்ள நடை

அ) கலைமுழுமை ஆ) ஒலிப்பின்னல் இ) சொற்புலம் ஈ) நடையியல்

13) ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்களில் குறிப்பிடும் குறுநாவலின் பெயர்

அ) இடை ஆ) திடை. இ) கிடை ஈ) தடை

14) சங்க இலக்கிய மொழியின் அடையாளமான தொகைநிலை பற்றிப் பேசும் தொல்காப்பிய இயல்

அ) செய்யுளியல் ஆ) மரபியல் இ) கிளவியல் ஈ) எச்சவியல்

15) Artistic whole - இதன் தமிழாக்கம் யாது ?

அ) இலக்கியத்தனம் ஆ) கலைமுழுமை இ) தொகைமொழி. ஈ) ஒலிக்கோலம்

www.Padasalai.Net

16) முத்தாய்ப்பாக முடியும் பாடலின் இறுதியில் பெரிதும் காணப்படுவது

அ) தொடரியல் பிறழ்வுநிலை ஆ) கவிதை மறுதலை இ) மறித்தாக்கம் ஈ) தொகைமொழி

17) இடுக வொன்றோ ; சுடுகவொன்றோ - எனும் சர்ச்சைக்குரிய பாடல் இடம்பெற்றது....

அ) புறநானூறு - 100 ஆ) புறநானூறு- 290 இ) புறநானூறு - 239 ஈ) புறநானூறு - 145

18) திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர்

அ) தொல்காப்பியர் ஆ) தி.சு.நடராசன் இ) சிற்பி பாலசுப்ரமணியம் ஈ) பேராசிரியர் சுந்தரனார்

19) பொருத்தமற்றதைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) தமிழ் அழகியல் ஆ) திறனாய்வுக்கலை இ) தமிழின் பண்பாட்டு வெளிகள் ஈ) கவிதைக் கலை

20) கூற்று 1 : நடராசன் அவர்கள் போலந்து நாட்டின் வார்தா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணிபுரிந்தவர்

கூற்று 2 இவர் திறனாய்வாளராகப் பரவலாக அறியப்படுபவர்.

அ) கூற்று 1,2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு. இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1,2 தவறு

21) அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல் ..

அ) குவலயானந்தம் ஆ) வீரசோழியம் இ) இலக்கண விளக்கம் ஈ) முத்துவீரியம்

22) தன்னேர் இலாத தமிழ்- இத்தொடரில் இலாத எனும் சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) ஈறுகெட்ட எதிர்மறைபெயரெச்சம் ஆ) இடைக்குறை இ) வினையாலணையும் பெயர் ஈ) பண்புத்தொகை

23) எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிய நூலை 1879 இல் வெளியிட்டவர்

அ) இளசை மணி ஆ) நெல்லையப்பர் இ) பத்மநாபன் ஈ) சாமி தீட்சிதர்

24) பரலி சு.நெல்லையப்பர் துணையாசிரியராகவும் ஆசிரியராகவும் பணியாற்றிய இதழ்

அ) கர்மயோகி. ஆ) சூரியோதயம். இ) லோகோபகாரி ஈ) வம்சமணிதீபிகை

25) பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க

அ) வ.உ..சிதம்பரனார் ஆ) பாரதி வாழ்த்து இ) நெல்லைத்தென்றல் ஈ) உய்யும் வழி

26) கூற்று 1 : தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வரும்.

கூற்று 2 : ய,ர,ழ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும்.

அ) கூற்று 1,2 சரி ஆ) கூற்று 1 தவறு 2 சரி இ) கூற்று 1 சரி 2 தவறு. ஈ) கூற்று 1,2 தவறு

27) Archive என்பதன் தமிழாக்கம் தருக.

அ) புனைவு ஆ) நூல்நிரல் இ) ஆவணம் ஈ) கையெழுத்துப்பிரதி

28) பொருத்துக.

அ. பாரதியின் கடிதங்கள் - 1.கி.ராஜநாராயணன்

ஆ. நெல்லூர் அரிசி - 2.பத்மநாபன்

இ. சுவரொட்டிகள் - 3 அகிலன்

ஈ. கிடை - 4.முத்துசாமி

அ) 2,3,4,1 ஆ) 2,4,3,1 இ) 2,1,4,3 ஈ) 3,2,4,1

29) கீழ்வருவனவற்றுள் டாக்டர் பொற்கோ எழுதிய நூலைத் தேர்ந்தெடுக்க.

அ) பாரதிகட்டுரைகள். ஆ) காட்டுவாத்து இ) உய்யும் வழி. ஈ) இலக்கண உலகில் புதிய பார்வை

www.Padasalai.Net

30) மும்பையில் ஒரே நாளில் 994 மி.மீ மழை பெய்தது எந்த ஆண்டு ?

அ) 2004 ஆ) 2005 இ) 2010 ஈ) 2011

31) 2010 ஆம் ஆண்டில் 30 நிமிடங்களில் 150 முதல் 250 மி.மீ வரை மழை பதிவான மாநிலம்

அ) பீகார் ஆ) உத்தரகாண்ட் இ) ஜம்மு காஷ்மீர் ஈ) கேரளா

32) உலகின் இயற்கைச் சமநிலை பாதிக்கப்பட முக்கிய காரணம்

அ) புவி வெப்பமயமாதல் ஆ) கனமழை. இ) புயல் ஈ) பருவநிலை

33) புவிவெப்பமடைதல் மனிதன் உருவாக்கப்பட்ட சிக்கல் - என்று கூறிய டேவிட் கிங் எந்த நாட்டு அறிவியல் அறிஞர்

அ) இந்தியா ஆ) இலங்கை இ) வங்கதேசம். ஈ) இங்கிலாந்து

34) பசுமைக்குடில் வாயுக்கள் அல்லாத ஒன்றைத் தேர்ந்தெடுக்க.

அ) கார்பன் டை ஆக்சைடு ஆ) ஹைட்ரஜன் இ) மீத்தேன் ஈ) நைட்ரஸ் ஆக்சைடு

35) நடுவண் அரசு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்த ஆண்டு

அ) 2005 டிசம்பர் 24 ஆ) 2005 டிசம்பர 25 இ) 2005 டிசம்பர் 23. ஈ) 2003 டிசம்பர் 25

36) மழையைக் கணிக்கும் அறிகுறிகளுள் தவறானதைத் தேர்ந்தெடுக்க.

அ) சூரியனைச் சுற்றி ஒளிவட்டம் ஆ) தூசுப்பணிமூட்டம் இ) செம்மை நிற மேகங்கள் ஈ) கார்மேகங்கள் மேற்கு வானத்தில் தோன்றுதல்

37) அய்யப்ப மாதவன் வெளியிட்ட கவிதைக் குறும்படத்தைத் தேர்க.

அ) நீர்வளி ஆ) பிறகொருநாள் கோடை இ) இன்று ஈ) மழைக்குப் பிறகும் மழை

38) வெயில் கண்ட பறவைகள் உற்சாகம் பீறிட என்ன செய்கின்றன ?

அ) சங்கீதம் இசைக்கின்றன ஆ) தலையசைத்து உதறுகின்றன இ) ஆகாயத்தில் பறக்கின்றன. ஈ) உறங்குகின்றன

39) சரியான இணையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) புதுப்பெயல் - புதுவயல் ஆ) புலம்பு - தனிமை இ) கொடுங்கோல்- நிமிர்ந்த கோல் ஈ) கண்ணி - பெண்

40) கைக்கொள் கொள்ளியர் கவுள்படையூ...- இதில் கவுள் எனும் சொல்லின் பொருள்

அ) காவலர் ஆ) விலங்கு இ) கன்னம் ஈ) வெள்ளம்

41) நெடுநல்வாடையில் உள்ள மொத்த அடிகள்

அ) 103 ஆ) 108 இ) 178 ஈ) 188

42) மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் - எனும் புணர்ச்சி விதி அமைந்த சொல்

அ) இனநிரை ஆ) புதுப்பெயல் இ) கொடுங்கோல் ஈ) கலங்கி

43) மாமேயல் மறப்ப மந்தி கூரப் பறவைகள் படிவன - இத்தொடரில் கூர என்பதன் பொருள்

அ) வீழ ஆ) நடுங்க இ) குளிர ஈ) தவிர்க்க

44) முதல்கல் எனும் கதை இடம்பெற்றுள்ள சிறுகதைத் தொகுப்பின் பெயர்

அ) மனிதத்தீவுகள் ஆ) கனல்பூக்கள் இ) தஞ்சைச் சிறுகதைகள் ஈ) குருவி மறந்த வீடு

45) பொருத்தமற்றதைத் தேர்ந்தெடுக்க.

அ) தொலைதூரவெளிச்சம் ஆ) கசக்கும் இனிமை. இ) கனல்பூக்கள் ஈ) கிழக்கு வாசல் உதயம்

46) தமிழில் பால்பகுப்பு ............. அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

அ) இலக்கிய ஆ) இலக்கண இ) தன்மை. ஈ) முன்னிலை

www.Padasalai.Net

47) இக்காலத் தமிழில் உயர்திணைப் பன்மைப் பெயர்கள் ........... பெற்று வருகின்றன.

அ) பன்மை விகுதி. ஆ) ஒருமை விகுதி இ) தன்மை விகுதி. ஈ) படர்க்கை விகுதி

48) உளப்படுத்தாத் தன்மைப் பன்மைக்குச் சான்று

அ) நாம் முயற்சி செய்வோம் ஆ) நாங்கள் முயற்சி செய்வோம். இ) நீ முயற்சி செய். ஈ) தீவிர முயற்சி செய்க

49)) சுற்றுச்சூழல் கல்வி - எனும் நூலை எழுதியவர்

அ) காமராசன் ஆ) பிரபஞ்சன் இ) ப.ரவி. ஈ) இராசமாணிக்கனார்

50) கீழ்வருவனவற்றுள் மசானா ஃபுகோகா எழுதிய நூலைத் தேர்ந்தெடுக்க.

அ) தமிழ்நடைக் கையேடு ஆ) இயற்கைக்கல்வி இ) வானம் வசப்படும். ஈ) இயற்கைக்கு திரும்பும் பாதை

விடைகள் :

| | |
|---|---|
| 1) இ | 26) ஆ |
| 2) ஈ. | 27) இ |
| 3) அ | 28) அ |
| 4) ஆ. | 29) ஈ |
| 5) இ | 30) ஆ |
| 6) அ | 31) இ |
| 7) இ | 32) அ |
| 8) ஆ. | 33) ஈ |
| 9) ஈ. | 34) ஆ |
| 10) இ | 35) இ |
| 11) அ. | 36) ஈ |
| 12) ஆ | 37) இ |
| 13) இ | 38) அ |
| 14) ஈ | 39) ஆ |
| 15) ஆ. | 40) இ |
| 16) அ | 41) ஈ |
| 17) இ | 42) அ |
| 18) ஆ | 43) ஆ |
| 19) ஈ. | 44) இ |
| 20) இ | 45) ஈ |
| 21) அ | 46) ஆ |
| 22) ஆ | 47) அ |
| 23) ஈ | 48) ஆ |
| 24) இ | 49) இ |

www.Padasalai.Net

25) அ 50) ஈ

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்,
பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் )
பாணாதுறை மேனிலைப்பள்ளி, கும்பகோணம்
தொடர்புக்கு - 9443740120.

www.Padasalai.Net